## ௯. திருப்புலியூர்

**அறிவான வருளுக்கு மொருபெரிய பொருளா**
**யகண்டமா யந்தமில்லா**
**ஆனந்த வாரமா யுள்ளநீ விரிவாய**
**வகிலகா ரியநிமித்தம்**
**வறிதிலா வைந்துமுக மாறுமுக மானாய்**
**மகாசத்தி யாகிநின்றாய்**
**வழியடிமை யானசுரர் நரர்துயர் செகுக்கவெவ்**
**வளவுவடி வோகொண்டனை**
**குறியாத வொருகுறிக் குண்ணிற்க வறிவுக்**
**குளிர்ச்சியை யெனக்கிகுப்பான்**
**குருவடிவு கொண்டுவர வெண்ணினா யில்லையே**
**குற்சித வனந்தைமோக**
**வெறிநூ றியோககை வல்லியசன் மயஞான**
**வீரப்பிர தாபவரசே**
**வீடுதரு ஞானநட மாடுபுலி யூரில்வளர்**
**மீளிவடி வேலிறைவனே.**

அறிவான அருளுக்கும் ஒரு பெரிய பொருளாய்
அகண்டமாய் அந்தம் இல்லா
ஆனந்த வாரமாய் உள்ள நீ விரிவு ஆய
அகில காரிய நிமித்தம்
வறிது இலா ஐந்து முகம் ஆறுமுகம் ஆனாய்
மகாசத்தி ஆகிநின்றாய்
வழி அடிமை ஆன சுரர் நரர் துயர் செகுக்க எவ்
வளவு வடிவோ கொண்டனை
குறியாத ஒருகுறிக்கு உள்நிற்க அறிவுக்
குளிர்ச்சியை எனக்கு இகுப்பான்
குருவடிவு கொண்டுவர எண்ணினாய் இல்லையே
குற்சித அனந்தை மோக
வெறி நூறியோக கைவல்லிய சன்மயஞான
வீரப்பிரதாப அரசே
வீடுதரு ஞானநடமாடு புலியூரில் வளர்
மீளி வடிவேல் இறைவனே.

---

1. **வாரம்** = கடல்; இகுத்தல் – கொடுத்தல்; **ககரவெதுகை** காண்க. **மீளி** = வலி

அருவருப்பான அறிவுமயக்கத்தைத் தரும் காமவெறியை அழித்து, மகாயோகமும் தான் தானாயிருத்தலும் அறிவுமயமுமான ஞானவீரப் பெருமையுடைய அரசே! வீடுபேற்றைத் தந்தருளும் ஞானத் திருக் கூத்தினைச் செய்யும் திருப்புலியூரில் (சிதம்பரம்) எழுந்தருளியுள்ள வலிமை பொருந்திய வடிவேல் இறைவனே! அறிவாக உள்ள அருள் எனப்படும் சத்திக்கும் ஒரு பிரமப் பொருளாய், எல்லையற்றதாய், முடிவில்லாததாய், பேரின்பக் கடலாய் உள்ள நீ, பரந்துள்ளதாகிய உலகக் காரியத்தின் பொருட்டுக் குறைவில்லாத ஐந்து முகத்தைவிட்டு ஆறு முகத்தைக் கொண்டாய்; மகாசத்தியாகி நின்றாய்; உனக்கு வழிவழியாக அடிமை பூண்டுள்ள தேவர்கள் மற்றும் மனிதர்கள் துயர் ஒழித்தற்பொருட்டு எவ்வளவோ வடிவங்களை எடுத்துக்கொண்டாய்; இதுதான் என்று கூறப்படாத பரம்பொருளைக் குறித்து மனம் நிற்க, ஞானமாகிய குளிர்ந்த அருளினை எனக்குக் கொடுத்தருள ஒரு ஞானாசிரியன் திருவடிவம் கொண்டு எழுந்தருள நீ திருவுளம் கொள்ளவில்லையே? 1

**ஆதார மின்னது நிராதார மின்னதென்**
**றற்பமுந் தெரிவலியிலா**
**அசடரு மெனைப்பற்றி வசைபேசி யெள்கியதை**
**யறியுமே நின்றிருவுளம்**
**வாதாடி வாதாடி யிரையுமென் மேனண்பு**
**வைத்தவர்கள் கண்ணின்முன்னே**
**மகிமைபெற் றுன்கிணக னாயுய்ய வருடிநன்**
**மாமறைக் கொடியுயர்த்த**
**வேதா விரிக்கரும் பிரணவப் பொருள்சொலும்**
**வித்வசா மர்த்தியநிபுண**
**விசததூ ளிப்பிரிய விரதநம் புக்கினிய**
**விமலவின் பக்குழியமே**
**மீதானர் குடியையீ டேற்றிய பிரானே**
**விசித்திரமயி லூருமுருகே**
**வீடுதரு ஞானநட மாடுபுலி யூரில்வளர்**
**மீளிவடி வேலிறைவனே.**

ஆதாரம் இன்னது நிராதாரம் இன்னது என்று
அற்பமும் தெரிவலியிலா
அசடரும் எனைப்பற்றி வசைபேசி எள்கியதை
அறியுமே நின் திருவுளம்

2. **கிணகன்** = அடிமை **விசதம்** = வெண்மை, வடசொல் **குழியம்** = திரட்சி

வாதாடி வாதாடி இரையும் என்மேல் நண்பு
வைத்தவர்கள் கண்ணின் முன்னே
மகிமை பெற்று உன் கிணகனாய் உய்ய அருள்தி நன்
மாமறைக் கொடி உயர்த்த
வேதா விரிக்கு அரும் பிரணவப் பொருள் சொலும்
வித்வ சாமர்த்திய நிபுண
விசத தூளிப்பிரிய விரத நம்புக்கு இனிய
விமல இன்பக் குழியமே
மீதானர் குடியை ஈடேற்றிய பிரானே
விசித்திரமயில் ஊரும் முருகே
வீடுதரு ஞானநடமாடு புலியூரில் வளர்
மீளி வடிவேல் இறைவனே.

நல்ல பெரிய வேதங்களின் பெருமையை உயர்த்தியவனும், நான்கு வேதங்களையும் திருவாய் மலர்ந்தவனுமான சிவபெருமானுக்கு, அறிதற்கரிய பிரணவப் பொருளை உரைத்த பேரறிவுத் திறமை வாய்ந்தவனே! வெண்ணீற்றுப்பிரியனே! பெருந்தவமுடையவனே! நம்பும் அடியார்க்கு இனிய குற்றமற்ற பேரின்பத் திரட்சியே! வானோரைத் தேவலோகத்தில் குடியேற்றிய கடவுளே! மிக்க அழகுடைய மயில் வாகனத்தில் ஏறிவரும் முருகனே! வீடுபேற்றை அளிக்கும் ஞானத்திருக் கூத்தினைச் செய்யும் திருப்புலியூரில் (சிதம்பரம்) எழுந்தருளியுள்ள வலிமைபொருந்திய வடிவேல் இறைவனே! ஆதாரம் எனப்படும் தடத்தலக்கண சிவமாக உள்ள உருவத்தை, முதலில் அறிந்து பற்றிக்கொண்டு, அதன்பின் நிராதாரமாயுள்ள சொரூபலக்கண பரமசிவத்தைப் பற்ற வேண்டும் என்னும் உண்மையைப் பற்றி, வசை பேசி, ஏளனம் செய்ததை உனது திருவுளம் அறியும். இந்த மூடர்களுடன் என் கொள்கையே சரி எனத்தக்க சான்றுகள் காட்டி வாதாடி வாதாடி பெரும் சத்தம் போடும் என்மேல், உண்மையான நட்பு வைத்துள்ளவர்களின் கண்முன்னே பெருமை பெற்று உன் அடிமையாக வாழ அருள்புரிவாயாக! 2

**புனுகுசவ் வாதுபூ சிக்கொள வெனச்சென்று**
**புழுதிபூ சிக்கொண்டது**
**போலவுனை யஞ்டிநா னாளாய தன்மையைப்**
**புகலவுண் ணாணுமிஙனே**
**மனமான கல்லினைத் தோணிவடி வாக்கியதை**
**மாண்புசா றிருவடியிலே**
**வார்த்துய்ய மாற்றொன்று நாந்தா மறிந்திலோ**
**மாசிலா வவனுமறியான்**

**3. தோணி** = சேறு; **ணகரவெதுகை** காண்க.

**எனநா னினைத்துவிட வென்றாலு மிவ்வுலக**
**மீந்தபர னேமுடிப்பான்**
**எனவாகு மிலைநாம் விரும்புநிலை யறியா**
**னெனப்படர வெனினுமொருவர்**
**வினவாமல் யாவுமறி வாய்மற் றெவிதமென**
**விளம்புவே னின்கருத்தை**
**வீடுதரு ஞானநட மாடுபுலி யூரில்வளர்**
**மீளிவடி வேலிறைவனே.**

புனுகு சவ்வாது பூசிக்கொள எனச் சென்று
புழுதி பூசிக்கொண்டது
போல உனை அண்டி நான் ஆளாய தன்மையைப்
புகல உள் நாணும் இங்ஙனே
மனம் ஆன கல்லினைத் தோணி வடிவு ஆக்கி அதை
மாண்புசால் திருவடியிலே
வார்த்து உய்ய மாற்று ஒன்ற நாம்தாம் அறிந்திலோம்
மாசிலா அவனும் அறியான்
எனநான் நினைத்துவிட என்றாலும் இவ்வுலகம்
ஈந்த பரனே முடிப்பான்
எனவாகும் இலை நாம் விரும்புநிலை அறியான்
எனப்படர எனினும் ஒருவர்
வினவாமல் யாவும் அறிவாய் மற்று எவிதம் என
விளம்புவேன் நின் கருத்தை
வீடுதரு ஞானநடமாடு புலியூரில் வளர்
மீளி வடிவேல் இறைவனே.

வீடுபேற்றைத் தரும் ஞானத் திருக்கூத்தினைச் செய்யும் திருப்புலியூரில் (சிதம்பரம்) எழுந்தருளியுள்ள வலிமை பொருந்திய வடிவேலிறைவனே! புனுகு, சவ்வாது எனும் வாசனைப் பொருள்களைப் பூசிக்கொள்ளச் சென்று, புழுதியைப் பூசிக்கொண்டது போல, உன்னை அண்டி நான் உனக்கு அடிமையான நிலைமையைக் கூற என் மனம் நாணம் அடையும்; இங்கு என் மனம் என்று சொல்லப்படும் கல்லைப் பிசைந்து சேறாக்கி அதை மாட்சி மிகுந்த உன் திருவடியிலே ஊற்றி வாழ்வதற்கு ஒரு மாற்று நாம்தான் அறிந்திலோம் என்றாலும், குற்றமில்லாத அவ்விறைவனும் அறியான் என நினைத்து விடலாம் என்றாலும், இவ்வுலகைப் படைத்த கடவுளே அதனை முடிப்பான் என்னும் ஓர் ஒழுங்கும் இல்லை; நாம்

விரும்பும் நிலையை அறியான் எனச் சொல்லலாம் என்றாலும் அதுவும் சரியாகாது; நீ ஒருவர் எதையும் கேட்காமலேயே அறிவாய்! பின்பு எவ்விதம் உன் கருத்தைக் கணித்து நான் கூறுவேன்? 3

**என்றைக்கு னருள்வந்து கூடுமோ கூடுமோ**
**வென்றுளந் தளருமெளியேன்**
**இதயந் தெரிந்தநீ குழகந் தயங்குவடி**
**விலகவென் னருகுகுறுகி**
**இன்றைக்கு னெண்ணநிறை வேறிற்றெ மன்பநிற்**
**கினியென்ன தாழ்வெனுங்கீர்**
**எப்பொழுது கண்டுகளி மீக்கொள்ளு வேனைய**
**விகபர மிரண்டினுக்கும்**
**ஒன்றாக நின்றருளு மொருதெய்வ மேசொலா**
**வுரையொன்றி லுள்ளபொருளே**
**ஓதரிய மெய்ஞ்ஞான பானுவே யருணெறிக்**
**குதவாத ஷட்பகையையும்**
**வென்றிகொண் டிலகன்ப ராதிக்க வின்பே**
**விவேகயோ கானந்தமே**
**வீடுதரு ஞானநட மாடுபுலி யூரில்வளர்**
**மீளிவடி வேலிறைவனே.**

என்றைக்கு உன் அருள் வந்து கூடுமோ கூடுமோ
என்று உளம் தளரும் எளியேன்
இதயம் தெரிந்த நீ குழகம் தயங்கு வடிவு
இலக என் அருகு குறுகி
இன்றைக்கு உன் எண்ணம் நிறைவேறிற்று எம் அன்பநிற்கு
இனி என்ன தாழ்வு எனும் கீர்
எப்பொழுது கண்டுகளி மீக்கொளுவேன் ஐய
இகபரம் இரண்டினுக்கும்
ஒன்றாக நின்று அருளும் ஒருதெய்வமே சொலா
உரை ஒன்றில் உள்ள பொருளே
ஓதரிய மெய்ஞ்ஞான பானுவே அருள்நெறிக்கு
உதவாத ஷட்பகையும்
வென்றி கொண்டு இலகு அன்பர் ஆதிக்க இன்பே
விவேக யோக ஆனந்தமே
வீடுதரு ஞானநடமாடு புலியூரில் வளர்
மீளி வடிவேல் இறைவனே.

இம்மை, மறுமை என்னும் இரண்டனுக்கும் உதவும் ஒரு பொருளாக நிலைபெற்று அடியார்களுக்கு அருள்புரியும் ஒப்பற்ற தெய்வமே! பேசாத மொழி என்னும் பிரணவ மந்திரத்தில் உள்ள பொருளே! சொல்லற்கரிய மெய்யறிவான சூரியனே! அருள்நெறியை அடைவதற்குப் பெருந்தடையாக உள்ள காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம் என்னும் அறுவகைப் பகையையும் அழித்து வெற்றிகொண்டு விளங்கும் மெய்யன்பர்களின் உரிமையான இன்பமே! அறிவும் யோகமும் ஆன ஆனந்தமே! வீடுபேற்றைத்தரும் ஞானக் கூத்தினைச் செய்யும் திருப்புலியூரில் (சிதம்பரம்) எழுந்தருளியுள்ள வலிமை பொருந்திய வடிவேலிறைவனே! ஐயனே! என்றைக்கு உன் அருள்வந்து என்னைச் சேருமோ சேருமோ என்று மனம் தளர்கின்ற எளியேனுடைய மனத்தை நன்கு அறிந்துள்ள நீ, இளமை விளங்கும் வடிவு திகழ என் அருகில் நெருங்கி வந்து "இன்றைக்கு உன் எண்ணம் நிறைவேறிவிட்டது. எம்முடைய அன்பனே! இனிமேல் உனக்கு என்ன தாழ்வு வரப்போகிறது?" என்னும் சொல்லை எப்பொழுது கேட்டு மகிழ்ச்சியை மிகுதியாகக் கொள்வேன்? கூறியருள்வாயாக! 4

**எண்ணியவொ ரெண்ணங்கை கூடாமை யுள்ளியென்**
**னெண்ணமினி யேதுவருமோ**
**என்றுமிக வுந்திகைக் கின்றதே குறையெலா**
**மெவ்வள வியம்பியுமினங்**
**கண்ணிலா னென்னவெனை வைத்தாய் படித்ததுங்**
**கருதினது மென்னபயனே**
**காலமெல் லாம்வறிதி லேகழித் துப்புறங்**
**காடடைந் திட்டமேலோ**
**தண்ணளி பெருக்கியெனை யாளநீ போகிறாய்**
**சரதவருண் மார்க்கத்திலே**
**சாமுன்ன மேமுத்தி சொலவில்லை யோவெனது**
**சைவசித் தாந்தமுதலே**
**விண்ணவர்கள் பணிபரா னந்தகுரு வேயாதி**
**விந்துநா தாதீதனே**
**வீடுதரு ஞானநட மாடுபுலி யூரில்வளர்**
**மீளிவடி வேலிறைவனே.**

எண்ணிய ஓர் எண்ணம் கைகூடாமை உள்ளிஎன்
எண்ணம் இனி ஏதுவருமோ
என்று மிகவும் திகைக்கின்றதே குறை எலாம்
எவ்வளவு இயம்பியும் இனம்

கண்ணிலான் என்ன எனை வைத்தாய் படித்ததும்
கருதினதும் என்ன பயனே
காலம் எல்லாம் வறிதிலே கழித்துப் புறம்
காடு அடைந்திட்ட மேலோ
தண்ணளி பெருக்கி எனை ஆள நீ போகிறாய்
சரத அருள் மார்க்கத்திலே
சாம் முன்னமே முத்தி சொலவில்லையோ எனது
சைவசித்தாந்த முதலே
விண்ணவர்கள் பணிபரானந்த குருவே ஆதி
விந்து நாத அதீதனே
வீடுதரு ஞானநடமாடு புலியூரில் வளர்
மீளி வடிவேல் இறைவனே.

எனது சைவசித்தாந்த முதற்பொருளே! விண்ணுலகத் தேவர்களும் வணங்கும் மேலான ஆனந்தமாயுள்ள ஞானகுருவே! ஆதியான விந்து நாதங்களைக் கடந்தவனே! வீடு பேற்றைத் தரும் ஞானத் திருக்கூத்தைச் செய்யும் திருப்புலியூரில் (சிதம்பரம்) எழுந்தருளியுள்ள வலிமை பொருந்திய வடிவேலிறைவனே! நான் நினைத்த நினைப்புக் கைகூடாததை நினைத்து, என் நினைவு இனிமேல் ஏது வருமோ என்று மிகவும் திகைப்படைகின்றது; என் குறைகள் எல்லாம் எவ்வளவுதான் சொன்னாலும் என்னை நீ இன்னமும் குருடன் என்றே கருதி ஒதுக்கி வைத்துள்ளாய்; நான் உன்னைப் பற்றிய சாத்திரங்களையும் தோத்திரங்களையும் இதுவரை படித்து வந்தாலும் உன்னை எப்போதும் நினைத்தாலும் கிடைத்த பயன் என்ன? ஒன்றுமில்லையே! என் காலமெல்லாம் வீணே கழித்து நான் சுடுகாட்டை அடைந்த பின்போ உனது குளிர்ந்த அருளைத் தந்து என்னை அடிமைகொள்ளப் போகிறாய்? மெய்யான அருள் மார்க்கத்தில் அடியார் சாவதற்கு முன்னாலேயே முத்தியின்பத்தைப பெறலாம் என்று சொல்லவில்லையோ? 5

**சலிலநா ரச்செறி வொதுக்கினவை யிருகரந்**
**தட்டுமுன் கூடுமந்தத்**
**தன்மையினு மதிவிரைவு கொண்டுகுவி நீருள்ள**
**சஞ்சலக் குப்பைநாளும்**
**மலிகின்ற வன்றிம்மி யுங்குன்ற வில்லையே**
**மலவிருளி னானிருந்து**
**மாதவஞ் செய்யவிட மாமோ விளக்கின்றி**
**மையிருளி லுள்ளபொருளை**

6. **சலிலம்** = நீர். **நாரம்** = நீர்ப்பாசி.

**உலகிலெவ ரறிவருன் னருளலா தேவர்மெய்**
**யுத்தியோ கத்துயர்ந்தார்**
**உயர்கருணை செய்துகவ லட்டிடா யருணகிரி**
**யுள்ளத் தமர்ந்தகுருவே**
**மெலிவினல் ஷட்சமய தேவாகி யவைகட்கு**
**மேலாகி நின்றநிறைவே**
**வீடுதரு ஞானநட மாடுபுலி யூரில்வளர்**
**மீளிவடி வேலிறைவனே.**

சலில நாரச் செறிவு ஒதுக்கின் அவை இருகரம்
தட்டும் முன் கூடும் அந்தத்
தன்மையினும் அதிவிரைவு கொண்டு குவிநீர் உள்ள
சஞ்சலக் குப்பை நாளும்
மலிகின்ற அன்றி இம்மியும் குன்றவில்லையே
மல இருளில் நான் இருந்து
மாதவம் செய்ய இடம் ஆமோ விளக்கு இன்றி
மை இருளில் உள்ள பொருளை
உலகில் எவர் அறிவர் உன் அருள் அலாது ஏவர் மெய்
உத்தியோகத்து உயர்ந்தார்
உயர் கருணை செய்து கவல் அட்டிடாய் அருணகிரி
உள்ளத்து அமர்ந்த குருவே
மெலிவில் நல் ஷட் சமய தேவாகி அவைகட்கு
மேலாகி நின்ற நிறைவே
வீடுதரு ஞானநடமாடு புலியூரில் வளர்
மீளி வடிவேல் இறைவனே.

அருணகிரிநாதர் மனத்துள் எழுந்தருளியுள்ள குருவே! குறைவில்லாத நல்ல ஆறு சமயங்களின் இறைவனாகி அவைகட்கும் மேலானவனாகி நின்ற பூரணப்பொருளே! வீடுபேற்றைத் தரும் ஞானத்திருக் கூத்தினைச் செய்யும் திருப்புலியூரில் (சிதம்பரம்) எழுந்தளியுள்ள வலிமை பொருந்திய வடிவேலிறைவனே! நீரில் மேல் படர்ந்த நீர்ப்பாசிகளை விலக்கினால், அவை இரண்டு கைகளையும் தட்டும் கண நேரத்தில் மீண்டும் முன்போல் கூடிவிடும்; அந்தத் தன்மையினும் மிகுந்த வேகம் கொண்டு குவியும் தன்மையுள்ள துன்பம் என்னும் குப்பை நாள்தோறும் மிகுகின்றவேயன்றி இம்மி அளவும் குறையவில்லையே? ஆணவமலம் எனும் இருளில் நான் இருந்துகொண்டு பெருந்தவம் செய்வதற்கு வாய்ப்புண்டோ? விளக்கில்லாமல் கார் இருளில் ஒரு பொருளை ஒருவர் எப்படி அறிய

முடியும்? அதுபோல் உன் அருள் இல்லாமல் எவர் மெய்ப்பதவியில் உயர்ந்தார்கள்? உன் கருணையின்றி எப்பதவியும் கிட்டாது! ஆகையால், மேலான கருணையைக் காட்டி என் கவலையை அழித்தருள்வாயாக! 6